DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.139/2015

Deposition of Witness : LW5/PW1

| Name | சரவணன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | சேகர் | Village | |
| Age | | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 14.10.2025. | | | |

( Accused present)

சாட்சியை பண்ருட்டி காவல் நிலைய இரண்டாம்நிலை காவலர் திரு.K. பிரசாத் Gr-II 1724 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது பண்ருட்டி, திருவள்ளுவர் நகரில் வசித்து, ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களையும், பட்டியல் சாட்சி ரவி என்பவரையும் தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் என் கையொப்பம் இல்லை. அதில் உள்ள சாட்சி கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியாது. எனக்கு இவ்வழக்கு சம்மந்தமாகவும், பார்வை மகசர் ஆவணம் சம்மந்தமாகவும் எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை** :

1. ஆஜர் எதிரியை தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் போலிசார் விசாரணையின்போது பாண்டிச்சேரியில் உள்ள டாடா மோட்டார்ஸ் பைனான்ஸ் பிரிவில் பண்ருட்டி கிளையில் Collection executive ஆக பணிபுரிந்து வருகிறேன் என்றும், கடந்த 16.07.2013 அன்று மாலை சுமார் 06.30 மணியளவில் நானும், பண்ருட்டி, எல்.என்.புரம், ஆர்.எஸ் மணிநகரைச் சேர்ந்த எனது நண்பருமான தண்டபாணி மகன் ரவி இருவரும் எங்கள் சொந்த வேலையாக எல்.என்.புரம், ஆர்.எஸ் மணிநகர், தர்கா மெயின்ரோடு வழியாக சென்றுகொண்டிருந்தோம் என்றும், அங்கு ஒரே கூட்டமாக இருந்தது என்றும், நாங்கள் இருவரும் அருகில் சென்று பார்த்தபோது, அங்கு காவல் ஆய்வாளர் விசாரித்துக்கொண்டிருந்தார் என்றும், எங்களை கண்டதும் இது தஞ்சாவூர் கோடாக் மகேந்திரா பேங்க் லிமிட் கலெக்ஷென் எக்ஸ்சிகியூட்டிவ் ஆக வேலை செய்து, பணத்தை வசூல் செய்து வங்கியில் தராமல், நம்பிக்கை மோசடி செய்த எதிரி வசிக்கும் இடம் என்று சொல்லி எங்கள் முன்பு மாதிரிவரைபடம், பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், சம்பவ இடமானது

பண்ருட்டி எல்.என்.புரம், ஆர்.எஸ் மணிநகரில், தர்கா மெயின்ரோடு அருகில் உள்ளது என்றும், சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் சுமார் 1 கி.மீ தெற்கில் உள்ளது என்றும், சம்பவ இடத்தை சுற்றியுள்ள இடங்களை நாங்கள் அடையாளம் சொன்னோம் என்றும், மேற்படி போலிசார் அதைக் குறித்துக்கொண்டு பார்வை மகசர் தயார் செய்துகொண்டார் என்றும், அதில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லிவிட்டு தற்போது எனக்கு மட்டும் தெரிந்த ஏதோ ஒரு காரணத்திற்காக அரசு தரப்பிலிருந்து விலகி பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை.**